

சங்கராபரணி ஆற்றில் ஆரியபாளையம் பழைய பாலத்துக்கு மேல் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதை கவர்னர் கைலாஷ்நாதன் பார்வையிட்ட காட்சி.

# ஆரியபாளையம் பழைய பாலம் வெள்ளத்தில் மூழ்கியது

## கவர்னர் கைலாஷ்நாதன் பார்வையிட்டார்

புதுச்சேரி, டிச.3-
வெள்ளத்தில் மூழ்கிய ஆரியபாளையம் பழைய பாலத்தை கவர்னர் கைலாஷ்நாதன் பார்வையிட்டார்.

### ஆறுகளில் வெள்ளம்

சாத்தனூர், வீடூர் அணைகள் திறக்கப்பட்டதால் தென்பெண்ணையாறு, சங்கராபரணி ஆறு உள்ளிட்டவற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. ஆற்றோரங்களில் உள்ள கிராமங்களுக்குள்ளும் வெள்ளநீர் புகுந்துள்ளது. அங்கு வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வெள்ளத்தில் சிக்கியவர்களை தேசிய பேரிடர் மீட்பு படையினர், தீயணைப்பு துறையினர் மீட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்து வருகின்றனர்.

### பழைய பாலம் மூழ்கியது

மழை வெள்ளத்தால் ஆரியபாளையத்தில் உள்ள பழைய பாலத்தை மூழ்கடித்து புதிய பாலத்தை தொட்டாற்போல் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. கரையோரத்தில் உள்ள வீடுகளில் நிறுத்தப்பட்டிருந்த கன்டெய்னர் லாரி, கார், மோட்டார் சைக்கிள்கள் வெள்ளத்தில் இழுத்து செல்லப்பட்டன.

தென்பெண்ணையாறு கிளை ஆறான மலட்டாற்றில் உடைப்பு ஏற்பட்டு, நெட்டப்பாக்கம் தொகுதி பண்டசோழநல்லூர் காலனியில் வெள்ளநீர் புகுந்தது. இதனால் அங்கு வசிக்கும் பொதுமக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கனமழையிலும் மடுகரை முத்துநகரில் வசிக்கும் சத்யா என்பவரது வீடு தீப்பிடித்து எரிந்தது.

### கவர்னர் பார்வையிட்டார்

இதற்கிடையே நேற்று வில்லியனூர் ஆரியபாளையம் பாலத்துக்கு சென்ற கவர்னர் கைலாஷ்நாதன் சங்கராபரணி ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதை பார்வையிட்டார். ஆற்றுக்குள் யாரும் இறங்காதவாறு பார்த்துக்கொள்ளுமாறு அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

அதன்பின்னர் பாகூர் பகுதிக்கு சென்ற அவர் தென்பெண்ணையாற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதை பார்த்தார். அங்கு தேசிய பேரிடர் மீட்பு படையினர் மீட்பு பணியில் ஈடுபடுவதையும் துரிதப்படுத்தினார்.

### சுற்றி செல்ல...

சங்கராபரணி ஆற்றில் பழைய பாலம் சேதமடைந்த நிலையில் புதிய பாலம் கட்டப்பட்டு சமீபத்தில் தான் திறக்கப்பட்டது. புதிய பாலம் கட்டப்படாமல் இருந்திருந்தால் புதுவையிலிருந்து விழுப்புரம் செல்வது மிகவும் சிரமமாகியிருக்கும். உறுவையாறு கரிக்கலாம்பாக்கம் வழியாகவோ, பத்துக்கண்ணு, திருக்கனூர் வழியாகவோ தான் சுற்றி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

தினமலர் தேதி - 3.12.2024